[1989 பிப்ரவரி 16

2. தகவல் கோரல்.

(அ) அரசியல் சட்டத் திருத்தம் தமிழில் தரப்பட வேண்டியதன் அவசியம் குறித்து.

* திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராஜ்ய சபாவிலிருந்து நிறைவேற்றியிருக்கும்படியான 62-வது அரசியல் சட்டத் திருத்தம் ஆங்கிலத்திலும் அதனுள்ளே கொஞ்சம் இந்தியிலுமாக இரண்டு மொழிகளிலேதான் இருக்கிறது. நம்முடைய நண்பர்கள் பலபேர்கள் ஆங்கிலம் தெரியாதவர்களாக இருக்கிறார்கள். இந்தி தெரியாதவர்கள் ஏராளமான பேர் இருக்கிறார்கள். அவர்கள் தமிழில் இதைக் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அதற்கு என்ன ஏற்பாட்டைத் தாங்கள் செய்ய இருக்கிறீர்கள். மத்திய அரசே பார்த்து மொழி பெயர்ப்புச் செய்து அனுப்பி இருக்க வேண்டும். ஆனால் அவர்கள் செய்ய வில்லை . . . .

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதிப்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் கேட்டதற்கு விடை சொல்லி விடுகிறேன். தமிழிலே தரவேண்டுமென்று மதிப்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். தமிழிலே தரப்பட வேண்டும் என்பது தான் மத்திய அரசினுடைய கோட்பாடு, மும்மொழிக் கொள்கை பின்பாடு. எனவே முடிந்தால் மத்திய அரசே இதைச் செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் இல்லாவிட்டாலும் தமிழக அரசே இதைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்த அறிவிக்கைகள்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் நீதிமன்றம் தீர்ப்பு எதுவும் கூறவில்லை என்று சொல்லியிருந்தார்கள். ஆனால் நீதிமன்றம் 10—1—1989-ல் தீர்ப்பு ஒன்று வழங்கி . . . .